முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

இலங்கை பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

# 12 - சைவநெறி

## புள்ளியிடும் திட்டம்



வற்றாப்பளை
கண்ணகியம்மன் ஆலயம்



திருவாதவூரடிகள்



சுவாமி விபுலாநந்தர்

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

# க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2022(2023)
## 12 - சைவநெறி
## புள்ளி வழங்கும் திட்டம்

**வினாத்தாள் II**

பரீட்சார்த்திகள் முதலாம் வினாவும் இரண்டாம் வினாவும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

**வினாத்தாள் II இற்குரிய மொத்தப் புள்ளிகள் = 60**

| | | | |
|---|---|---|---|
| வினா 1 - கட்டாய வினா மொத்தப் புள்ளிகள் | **10 x 02** | = | 20 புள்ளிகள் |
| வினா 2 - கட்டாய வினா மொத்தப் புள்ளிகள் | **02 x 05** | = | 10 புள்ளிகள் |
| வினா 3 - 7 வரை எவையேனும் 03 வினாக்கள் மொத்தப் புள்ளிகள் | **03 x 10** | = | 30 புள்ளிகள் |
| | **புள்ளிகள் 60** | | |

தனித்தனியான வினாக்களுக்குப் புள்ளிகள் பகிர்ந்தளிக்கப்படும் முறை

வினா 1 - 10 x 2 புள்ளிகள் வீதம், மொத்தம் -: 20 புள்ளிகள்

| | | |
|---|---|---|
| வினா 2 - | (அ) பாடல்கள் 02 அடிமுறை வழுவாது எழுதுதல் | 02 x 03 = 06 |
| | (ஆ) பொழிப்புரை எழுதுதல் | 02 x 02 = 04 |
| | | **புள்ளிகள் 10** |

**வினா 3**

(i) - 02

(ii) - 03

(iii) - 05

மொத்தம் = 10 புள்ளிகள்

**வினா 4**

(i) - 02

(ii) - 03

(iii) - 05

மொத்தம் = 10 புள்ளிகள்

**வினா 5**

(i) - 02

(ii) - 03

(iii) - 05

மொத்தம் = 10 புள்ளிகள்

**வினா 6**

(i) - 02

(ii) - 03

(iii) - 05

மொத்தம் = 10 புள்ளிகள்

**வினா 7**

05 + 05 = 10 **புள்ளிகள்**

**பகுதி I மொத்தம் 40 புள்ளிகள்**

**பகுதி II மொத்தம் 60 புள்ளிகள்**

**மொத்தம் 100 புள்ளிகள்**

**விசேட அறிவுறுத்தல் :** ஒரு சரியான விடைக்கு 01 புள்ளி வீதம் மொத்தமாக புள்ளிகள் 01x 40 = 40 கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளைப் பல்தேர்வு விடைப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

| | |
|---|---|
| **சரியான விடைகளின் தொகை** | 40 |
| **பத்திரம் இன் மொத்தப் புள்ளி** | 40 |

## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2022(2023)
## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடலுக்கான பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன் பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற மைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர் ஊதாநிற மைப்பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும் போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும் போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியைப் பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பின்னங்களாகப் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரீட்சகரினால் புள்ளிகள் பிழையற்றது என உறுதிப்படுத்த நீலநிற அல்லது கறுப்புநிறப் பேனாவினை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ....................................................... ✓ △ $\frac{4}{5}$
.......................................................
.......................................................

(ii) ....................................................... ✓ △ $\frac{3}{5}$
.......................................................
.......................................................

(iii) ....................................................... ✓ △ $\frac{3}{5}$
.......................................................
.......................................................

(03) $\quad (i)\ \frac{4}{5} + (ii)\ \frac{3}{5} + (iii)\ \frac{3}{5} = \boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள்**

1. **துளைத்தாள் தயாரித்தல்**
   - I. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.
   - II. அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.
   - III. துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக் கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.
   - IV. சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.
   - **V. வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**
2. **அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக**

**கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்து விட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.**

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை √ அடையாளத்தாலும் பிழையான விடையை X அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளினால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும், **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் √ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை குறிப்பிடும் போது ஓவலண்ட் கடதாசியின் இடது பக்க நிரலைப் பயன்படுத்தவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன்பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டிவிடவும்.
4. மொத்தப் புள்ளிகளைக் கவனமாக கூட்டி முன்பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் ஒவ்வொரு விடைக்கும் வழங்கப்பட்டுள்ள புள்ளிகளின் தொகையினை ஒவ்வொரு பக்கமாக கூட்டவும். அக்கூட்டுத்தொகை உங்களால் முன்பக்கத்தில் மொத்தம் எனக் குறிப்பிட்ட மொத்தபுள்ளிகளுக்கு சமமானதா? என பரீட்சிக்கவும்.

★ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

I. ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்பட மாட்டாது.

II. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்படவேண்டும்.

III. வினாப்பத்திரம் I இற்கான புள்ளிப்பட்டியலில் **"Total Marks"** என்ற நிரலில் பதிந்து **எழுத்திலும் எழுத வேண்டும்.**

IV. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப்பட்டியலை தயார் செய்யும் போது பகுதிப் புள்ளிகளைப் பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப் புள்ளிகளை புள்ளிப் பட்டியலில் **"Total Marks"** என்ற நிரலில் பதியவும்.

V. 43 சித்திரப் பாடத்திற்குரிய I,II மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியிலில் பதிந்து **எழுத்திலும் எழுத வேண்டும்.**

VI. 21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப் பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப் புள்ளிகளை உள்ளடக்கி அவ் வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை, புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கிய குறிப்பு:**

I. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப் புள்ளியானது முழுத்தானத்தில் புள்ளிப் பட்டியலில் பதியப்படுதல் வேண்டும். எந்த விதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப் புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.

II. புள்ளிப் பட்டியலின் சகல பக்கங்களிலும் புள்ளிகளைப் பதிந்த உதவிப்பரீட்சகர், புள்ளிகளை சரிபார்த்த உதவிப்பரீட்சகர், மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணித பரீட்சகர் மற்றும் பிரதம பரீட்சகர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

[සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**12 T I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)**

| | |
|---|---|
| ශෛවධර්මය I, II<br>சைவநெறி I, II<br>Saivanery I, II | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## சைவநெறி I

அறிவுறுத்தல்கள் :

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

1. மண்ணுலகிலும் விண்ணுலகிலும் தனக்கு மேலே தலைவன் எவரும் இல்லை என்பதால் 'பிள்ளையார்' பெறும் நாமம்
   (1) கணபதி (2) விக்னேஸ்வரர் (3) விநாயகர் (4) வக்கிர துண்டர்

2. 'தமிழ்மறை' எனச் சிறப்பிக்கப்படும் நூல்
   (1) திருக்குறள் (2) திருமந்திரம் (3) தேவாரம் (4) திருவாசகம்

3. வைதிக நெறியின் பிரஸ்தானத்திரயங்களுள் ஒன்றாகக் கொள்ளப்படுவது
   (1) பகவத்கீதை (2) புராணம் (3) ஆகமம் (4) வேதம்

4. பிறமதத்தினர் சைவத்திற்கு எதிராகச் செய்த பிரசாரங்களைக் கண்டித்து ஆறுமுகநாவலர் எழுதிய நூல்
   (1) யாழ்ப்பாண வைபவமாலை (2) யாழ்ப்பாணச் சமயநிலை
   (3) சைவ தூஷண பரிகாரம் (4) பாலபாடம்

5. சைவத் திருமுறைகளில் பன்னிரண்டாம் திருமுறையாக அமைவது
   (1) திருத்தொண்டர் புராணம் (2) திருத்தொண்டத் தொகை
   (3) திருத்தொண்டர் திருவந்தாதி (4) திருத்தொண்டர் உலா

6. ஆன்மா இறைவனை அடைவதற்கான அருளைத் தரும் குரு
   (1) தீட்சாகுரு (2) ஞானகுரு (3) வித்தியாகுரு (4) சமயகுரு

7. ஆன்மா அனுபவிக்கும் அனைத்துப் போகப் பொருள்களும் தோன்றுவதற்கு மூலகாரணமாக அமைவது
   (1) ஆணவம் (2) கன்மம் (3) மாயை (4) பசு

8. 'தருமம்' என்ற சமஸ்கிருதச் சொல்லின் அடிப்படைப் பொருள்
   (1) தாங்குதல் (2) வெல்லுதல் (3) வளர்தல் (4) ஓய்தல்

9. மகோற்சவங்களில் இரதோற்சவம் குறித்து நிற்கும் பஞ்சகிருத்தியமாவது
   (1) படைத்தல் (2) காத்தல் (3) அழித்தல் (4) மறைத்தல்

**10.** 'தம்பிரான் தோழன்' என்னும் திருநாமத்தையுடைய சமயகுரவர்
(1) சுந்தரமூர்த்தி நாயனார் (2) அப்பர் சுவாமிகள்
(3) திருஞான சம்பந்தர் (4) மாணிக்கவாசகர்

**11.** புத்தளம் மாவட்ட உடப்பு ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் கோயிலுடன் தொடர்புடைய நாட்டார் தெய்வம்
(1) கண்ணகியம்மன் (2) திரௌபதை அம்மன்
(3) வைரவர் (4) நாகதம்பிரான்

**12.** திருப்பனந்தாள் எனும் திருத்தலத்தில் சாய்ந்திருந்த சிவலிங்கத்தை நிமிர்த்தியவர்
(1) கச்சியப்ப சிவாச்சாரியார் (2) மெய்ப்பொருள் நாயனார்
(3) குங்கிலியக்கலய நாயனார் (4) நம்பியாண்டார் நம்பி

**13.** தினமும் பன்னிரண்டு காலப் பூசைகள் நடைபெறும் திருத்தலம்
(1) நகுலேச்சரம் (2) திருக்கோணேச்சரம்
(3) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் (4) திருச்செந்தூர்

**14.** பரஞ்சோதி முனிவரிடம் தமது ஞானக் கல்வியைப் பெற்றுக்கொண்ட சந்தானகுரவர்
(1) மெய்கண்டதேவர் (2) அருணந்தி சிவாசாரியார்
(3) உமாபதி சிவாசாரியார் (4) மறைஞான சம்பந்தர்

**15.** மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலையைப் பாடியவர்
(1) சேந்தனார் (2) சேதிராயர் (3) குமரகுருபரர் (4) கபிலதேவர்

**16.** ஈழத்தில் வைகாசிப் பொங்கல் பெருவிழா மிகச்சிறப்பாக இடம்பெறும் ஆலயம்
(1) மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
(2) புன்னைச்சோலை காளியம்மன் கோயில்
(3) வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயம்
(4) பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலயம்

**17.** "உம்மடியேன் உம்மடிகள் தாங்கி வரும் பெருவாழ்வு வந்து எய்தப் பெற்று இங்குற்றேன்" என திருஞானசம்பந்தரை நோக்கிக் கூறியவர்
(1) திருநாவுக்கரசர் (2) மங்கையற்கரசியார்
(3) பாண்டிய மன்னன் (4) குலச்சிறையார்

**18.** 'பெருங்கதை விரதம்' என அழைக்கப்படுவது
(1) கேதார கௌரி விரதம் (2) கந்தசஷ்டி விரதம்
(3) வரலட்சுமி விரதம் (4) விநாயகசஷ்டி விரதம்

**19.** கோயில் வாயில்களில் அமைக்கப்பெறும் தோரணங்களோடு தொடர்புடைய கலை
(1) இசைக்கலை (2) நடனக்கலை (3) நாடகக்கலை (4) அலங்காரக்கலை

**20.** பரிபக்குவம் அடைந்திருந்த முள்ளிச்செடி ஒன்றிற்கு முத்தி கொடுத்தருளியவர்
(1) மறைஞான சம்பந்தர் (2) உமாபதி சிவாசாரியார்
(3) அருணந்தி சிவாசாரியார் (4) மெய்கண்ட தேவர்

**21.** "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" எனும் பாடலடியில் வெளிப்படும் விழுமியப்பண்பு
(1) விருந்தோம்பல் (2) ஒப்புரவு (3) இறைவழிபாடு (4) வாய்மை

**22.** 'பிரமன்தன் சிரம் அரிந்த பெரியோய் போற்றி' எனும் பாடலடியில் போற்றப்படுபவர்
(1) இந்திரன் (2) விஷ்ணு (3) விநாயகர் (4) வைரவர்

**23.** கறுப்பு எள், நல்லெண்ணெய் முதலியவற்றைத் தானம் செய்தலோடு தொடர்புடைய விரதம்
(1) கந்தசஷ்டி (2) புரட்டாதிச்சனி (3) திருவாதிரை (4) விநாயகசஷ்டி

**24.** அக ஆசாரங்களுள் ஒன்றாக அமைவது
(1) உடம்பைத் தூய்மையாக வைத்திருத்தல் (2) சுத்தமான உணவை உண்ணுதல்
(3) நல்ல சிந்தனைகளோடு வாழுதல் (4) விதிப்படி பூசை செய்தல்

**25.** அருணந்தி சிவாசாரியாரால் அருளப்பட்ட நூல்கள்
(1) சிவஞான போதம், சிவஞானசித்தியார்
(2) சிவஞானசித்தியார், இருபா இருபஃது
(3) சிவஞான போதம், இருபா இருபஃது
(4) சிவஞானசித்தியார், திருவருட்பயன்

**26.** பதியின் சொரூபலக்கணம் என்பது
(1) குணங்குறிகளுக்கு அப்பாற்பட்ட நிலையாகும்.
(2) மூவகைத் திருமேனிகளைக் கொண்ட நிலையாகும்.
(3) எண்வகைக் குணங்களைக் கொண்ட இலக்கணமாகும்.
(4) பஞ்ச கிருத்தியங்களை நிகழ்த்தும் நிலையாகும்.

**27.** வேதம் 'அபௌருஷேயம்' என அழைக்கப்படுவதற்கான காரணம்
(1) செவி வழியாகப் பேணப்பட்டு வந்ததனாலாகும்.
(2) நான்கு பிரிவுகளைக் கொண்டதனாலாகும்.
(3) மனிதனால் படைக்கப்படாமையினாலாகும்.
(4) தொன்றுதொட்டு பயிலப்பட்டு வருவதனாலாகும்.

**28.** முற்காலத்தில் வீடுகளின் முகப்புப் பகுதியில் திண்ணைகளை அமைத்ததன் நோக்கம்
(1) மேய்ச்சலுக்கு சென்றுவரும் கால்நடைகள் தங்கிச் செல்வதற்காகும்.
(2) வழிப்போக்கர்கள் தங்கி பசியும் களைப்பும் போக்குவதற்காகும்.
(3) கால்நடைகள் தம் உடலை உரசி உண்ணி முதலானவற்றை அகற்றுவதற்காகும்.
(4) வீட்டிலுள்ளோர் அமர்ந்திருந்து வீண்வார்த்தைகள் பேசுவதற்காகும்.

**29.** பகவத்கீதையும் தம்மபதமும் போதிக்கும் அறங்களில் உள்ளடங்காதது
(1) மனிதர்கள் ஆசைக்கு முக்கியத்துவம் அளிக்காதிருக்க வேண்டும்.
(2) மானுட விடுதலைக்கு அறம் முக்கியமானது.
(3) செயல்களை பயன் கருதிச் செய்தல் வேண்டும்.
(4) அவரவர் தம் கடமைகளைச் சரிவரச் செய்தல் வேண்டும்.

**30.** ஆப்த வாக்கியப் பிரமாணம் என்பது
(1) பொறிகள் வாயிலாகப் பெறும் அறிவாகும்.
(3) ஞானியர் கண்டுணர்ந்து கூறிய உண்மைகளாகும்.
(3) தெரிந்த உண்மைகளிலிருந்து ஊகித்தறியும் அறிவாகும்.
(4) ஐம்பூதங்களிலிருந்து பெறுகின்ற அறிவாகும்.

**31.** சிவத்தியானம் என்பது
(1) ஆலயத்தின் எழிலை மனதில் நிறுத்தித் தியானிப்பதாகும்.
(2) மனிதன் தன்னையும் தன் வாழ்வையும் மனதிலிருத்தித் தியானிப்பதாகும்.
(3) கடவுளின் கருணையையும் பெருமைகளையும் உள்ளத்திலிருத்தித் தியானிப்பதாகும்.
(4) பிதிர்களையும் அவர்களின் பெருமைகளையும் மனதில் இருத்தித் தியானிப்பதாகும்.

**32.** சைவ விழுமியங்களில் ஒப்புரவு என்பது
(1) உயிர்களிடத்தில் அன்பு பாராட்டுதலாகும்.
(2) தனிமனிதருக்கு உணவு முதலானவற்றைக் கொடுப்பதாகும்.
(3) உள்ளதை உள்ளபடியே எடுத்துரைக்கும் தர்மமாகும்.
(4) சமூகத்தின் தேவையறிந்து செய்யும் அறச் செயல்களாகும்.

**33.** மார்கழித் திருவாதிரை நாளில் விசேடமாக அபிஷேக ஆராதனைகள் இடம்பெறுவது
(1) சிவலிங்கப் பெருமானுக்கு
(2) தட்சிணாமூர்த்திக்கு
(3) நடராஜப் பெருமானுக்கு
(4) இலிங்கோற்பவ மூர்த்திக்கு

**34.** திருநீறானது 'விபூதி' எனப் பெயர் பெறக் காரணமாக அமைவது
(1) ஒளியைக் கொடுப்பதனாலாகும்.
(2) மும்மலங்களை நீக்குவதனாலாகும்.
(3) பாவங்களை எரித்து நீறாக்குவதனாலாகும்.
(4) மேலான செல்வத்தைத் தருவதனாலாகும்.

35. அபரக் கிரியைகளில் 'அஸ்தி சஞ்சயனம்' என்பது,
(1) இறந்தவரின் உறவினர் ஒன்று கூடி அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதாகும்.
(2) இறந்தவரின் பூதவுடற் சாம்பலை புண்ணிய நீர்நிலைகளில் கரைத்தலாகும்.
(3) ஒருவரின் இறப்பின் பின் ஒவ்வொரு மாதமும் செய்யும் கிரியையாகும்.
(4) இறந்தவருக்கு ஆண்டுதோறும் குறித்த திதியில் செய்யப்படுவதாகும்.

36. பஞ்சகிருத்தியங்களில் மறைத்தல் என்பது,
(1) ஆன்மாக்களை மலபந்தத்திலிருந்து முற்றாக நீக்கி அவற்றுக்கு பேரின்பத்தைக் கொடுப்பதாகும்.
(2) படைக்கப்பட்டவை இருக்க வேண்டிய காலம் வரையும் அவற்றை இரட்சித்தலாகும்.
(3) ஆன்மாக்களைப் பீடித்துள்ள மலத்தின் வீரியத்தைத் தடுத்தலாகும்.
(4) ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன போகங்களை உருவாக்குதலாகும்.

37. பசு புண்ணியம் என்பது,
(1) கடவுளுக்குச் செய்யும் தொண்டுகளாகும்.
(2) கடவுளின் அடியவர்க்குச் செய்யும் பணிகளாகும்.
(3) திருக்கோயிலுக்குச் செய்யும் சேவைகளாகும்.
(4) உயிர்களுக்குச் செய்யும் நற்கருமங்களாகும்.

- மேல்வரும் அட்டவணையில் A இலிருந்து I வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 38 தொடக்கம் 40 வரையான ஒவ்வொரு வினாவுக்குமான விடையைத் தெரிவுசெய்க.

| ஆலயம் | தல விருட்சம் | சிறப்பு |
|---|---|---|
| A - மாமாங்கப் பிள்ளையார் கோயில் | D - வன்னி மரம் | G - வருடத்தில் இரண்டு மகோற்சவங்கள் நடைபெறும் ஆலயம் |
| B - பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் | E - நொச்சி மரம் | H - விநாயகர் அங்கி சாத்தப்பட்ட சிவலிங்கத்தை மூலவராகக் கொண்ட ஆலயம் |
| C - இணுவில் கந்தசுவாமி கோயில் | F - குருந்த மரம் | I - அளவில் மிகப்பெரிய மஞ்சத்தை உடைய ஆலயம் |

38. விஷ்ணு ஆலயத்தோடு தொடர்புடைய தொகுதி
(1) BDI (2) BDG (3) BEI (4) BFG

39. மூலலிங்கத்துடன் தொடர்புடைய தொகுதி
(1) ADH (2) AEH (3) AFH (4) AFI

40. முருகன் ஆலயத்துடன் தொடர்புடைய தொகுதி
(1) CDI (2) CDG (3) CEG (4) CEI

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

## අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2022 (2023)
## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

විෂය අංකය / பாட இலக்கம்: **12** විෂයය / பாடம்: **சைவநெறி**

### I පත්‍රය - පිළිතුරු
### I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 2 | 21. | 1 | 31. | 3 |
| 02. | 2 | 12. | 3 | 22. | 4 | 32. | 4 |
| 03. | 1 | 13. | 4 | 23. | 2 | 33. | 3 |
| 04. | 3 | 14. | 1 | 24. | 3 | 34. | 4 |
| 05. | 1 | 15. | 4 | 25. | 2 | 35. | 2 |
| 06. | 2 | 16. | 3 | 26. | 1 | 36. | 3 |
| 07. | 3 | 17. | 1 | 27. | 3 | 37. | 4 |
| 08. | 1 | 18. | 4 | 28. | 2 | 38. | 2 |
| 09. | 3 | 19. | 4 | 29. | 3 | 39. | 3 |
| 10. | 1 | 20. | 2 | 30. | 2 | 40. | 4 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

**නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව**
சரியான விடைகளின் தொகை

| |
|---|
| 25 |
| 40 |

**I පත්‍රයේ මුළු ලකුණු**
பத்திரம் I இன் மொத்தப்புள்ளி

| |
|---|
| 25 |
| 40 |

[முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]
Department of Examinations, Sri Lanka

**12 | T | I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)
**General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)**

ශෛවනෙරි I, II
சைவநெறி I, II
Saivanery I, II

## சைவநெறி II

* முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

1. மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

   (i) விரதம் என்றால் என்ன?

   (ii) பூர்வக்கிரியைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

   (iii) இந்துக்களின் வாழ்வில் பஞ்சாங்கம் பயன்படுத்தப்படும் நிகழ்வுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

   (iv) சணிகலிங்கம் அமைக்கப் பயன்படும் பொருட்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

   (v) வைரவர்க்குரிய விசேட தினங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

   (vi) வரதபண்டிதரால் இயற்றப்பட்ட பிள்ளையார் கதையின் நூற்பயன்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

   (vii) கந்தபுராணத்தைப் பாடியவர் யார்? இப்புராணத்தின் எக்காண்டத்தில் மீட்சிப் படலம் இடம் பெற்றுள்ளது?

   (viii) ஈழத்தில் பாடல் பெற்ற புராதன ஈஸ்வரங்கள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.

   (ix) திருமுறைகளைத் தொகுத்தவர் யார்? தொகுப்பித்தவர் யார்?

   (x) கண்ணகியம்மன் சடங்குகளின்போது பாடப்படும் பாடல்களுக்குப் பின்னணியாக ஒலிக்கப்பெறும் இசைக்கருவிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

2. (i) மேல்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிறழாது திருத்தமாக எழுதுக.

   (அ) "மீளா அடிமை உமக்கே......"

   (ஆ) "குனித்த புருவமும் கொவ்வைச்......"

   (இ) "உறுமை சேர்வது மெய்யினையே......"

   (ஈ) "உம்பர்தருத் தேனுமணிக்......"

   (உ) "தூக்கும் பறுவல் துறை......"

   (ii) மேலே (i) இல் எழுதிய பாடல்களின் பொழிப்புரையை எழுதுக.

3. "யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
   எங்கு எழுந்தருளுவது இனியே" - திருவாதவூரர்

   (i) திருவாதவூரருக்கு மாணிக்கவாசகர் எனப் பெயர் வரக் காரணம் யாது?

   (ii) திருவாதவூரர் செய்த அற்புதங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

   (iii) திருவாதவூரர் 'திருச்சிற்றம்பலக் கோவையாரைப்' பாடிய சந்தர்ப்பத்தினைச் சுருக்கமாக விளக்குக.

4. "நாயகனார் முன்னம் உரைத்த ஆகமநூல்" - பெரிய புராணம்

 (i) ஆகமம் என்பதன் பொருள் யாது?

 (ii) சைவம், வைணவம், சாக்தம் ஆகிய நெறிகளுக்குரிய ஆகமங்களின் சிறப்புப் பெயர்களைக் குறிப்பிடுக.

 (iii) சிவாகமங்கள் கூறும் நான்கு பாதங்களைச் சுருக்கமாக விளக்குக.

5. "சத்தசத்தைச் சாரா தசத்தறியா தங்கணிலை
யுற்ற சத சத்தா முயிர்" - திருவருட்பயன்

 (i) ஆன்மாக்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் இரண்டு தருக.

 (ii) ஆன்மாக்கள் 'சதசத்து' என அழைக்கப்படுவதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.

 (iii) மூவகை ஆன்மாக்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

6. "அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு" - திருவள்ளுவர்

 (i) இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகள் இரண்டின் பெயர்களைத் தருக.

 (ii) பண்டிகைகளைக் கொண்டாடுவதனால் ஏற்படும் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

 (iii) தீபாவளிப் பண்டிகையின் தத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக.

7. மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

 (i) சுவாமி விபுலாநந்தரின் சமயப்பணிகள்

 (ii) சைவ வித்தியாவிருத்திச் சங்கம்

 (iii) நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம்

 (iv) சைவ விரதங்களில் அன்புடைமை

※※※

## பகுதி II

### கற்றல் பேறுகள்

1.

I. விரதங்களின் முக்கியத்துவத்தை அறிந்து அதனைப் பின்பற்றுவர்.

II. பூர்வக்கிரியைகளின் அவசியத்தை உணர்ந்து அவற்றிற்கு மதிப்பளிப்பர்.

III. பஞ்சாங்கம் பார்ப்பதன் அவசியத்தை உணர்ந்து அவற்றைத் தம் வாழ்வில் கைக்கொள்வர்.

IV. இலிங்க வழிபாட்டின் முக்கியத்துவத்தினை உணர்வர்.

V. வைரவர் வழிபாடு பற்றிய சமய நம்பிக்கையைக் கூறுவர்.

VI. பிள்ளையார் கதையில் வரும் முக்கிய பகுதிகளை பிறருக்கு எடுத்துக் கூறுவர்.

VII. கந்தபுராண இலக்கியத்தைப் பற்றி அறிவர்.

VIII. புராதன ஈஸ்வரங்களின் சிறப்புக்களை அறிந்து போற்றுவர்.

IX. திருமுறைகளைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் பற்றி தேடியறிவர்.

X. கண்ணகியம்மன் வழிபாட்டோடு தொடர்புடைய விடயங்களைக் கூறுவர்.

2. அடிமுறை பிழையாது திருமுறைப் பாடல்களையும் அவற்றின் பொருளையும் எழுதும் ஆற்றலைப் பெற்றிருப்பதுடன் விழுமியப் பண்புகளையும் வளர்த்துக் கொள்வர்.

3. நாயன்மார்களின் பணிகளை அறிந்து தம் வாழ்விலும் கடைப்பிடிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வர்.

4. ஆகமத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை அறிந்து தம் வாழ்வில் கடைப்பிடிப்பர்.

5. சைவசித்தாந்தம் கூறும் ஆன்மாக்களின் இயல்புகளை விளக்குவர்.

6. பண்டிகைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றை முறையாகக் கொண்டாடுவர்.

7.

I. சுவாமி விபுலானந்தர் அவர்களது சமயப் பணிகளை அறிந்து கூறுவர்.

II. சைவவித்தியா விருத்திச் சங்கம் ஆற்றிய பணிகளை அறிந்து சமயத்தினூடாக சமயப்பணிகள் ஆற்ற வேண்டும் என்ற மனப்பாங்கைப் பெற்றுக் கொள்வர்.

III. நயினை நாகபூசணி அம்மன் ஆலயச் சிறப்புக்களை அறிவர்.

IV. அன்பு ஒன்றே இறைவனை அடைதற்கான எளிய வழியாகும் என்பதனை ஏற்றுச் செயற்படுவர்.

## சைவ நெறி - II

1. மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) விரதம் என்றால் என்ன?

மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு விதிப்படி வழிபடலாகும்.

(ii) பூர்வகிரியைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

அன்னப் பிராசனம், வித்தியாரம்பம், திருமணம்

(iii) இந்துக்களின் வாழ்வில் பஞ்சாங்கம் பயன்படுத்தப்படும் நிகழ்வுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

பண்டிகைகள் (சித்திரை வருடப் பிறப்பு, தைப்பொங்கல்)

விழாக்கள் (திருமணம், பூப்புனிதச்சடங்கு)

சமய அனுட்டானங்கள் (ஆலயக் கிரியைகள்)

(iv) க்ஷணிகலிங்கம் அமைக்கப் பயன்படும் பொருட்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

மண், அரிசி, அன்னம், ஆற்றுமணல், கோமயம், வெண்ணெய், உருத்திராக்கம், சந்தனம், சர்க்கரை, அரிசிமா

(v) வைரவருக்குரிய விசேட தினங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

சித்திரைப்பரணி, ஐப்பசிப்பரணி, தைமாதத்து முதலாம் செவ்வாய்க் கிழமை

(vi) வரதபண்டிதரால் இயற்றப்பட்ட பிள்ளையார் கதையின் நூற்பயன்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

- ❖ பிள்ளையார் பெருங்கதையைக் கேட்பதால் பொன், பொருள், கல்வி, புத்திரபாக்கியம் முதலான எல்லாச் செல்வங்களும் கிட்டும்.
- ❖ விநாயகர் சஷ்டி விரதத்தை அனுட்டிப்பவர்கள் சிறந்த வாழ்வு வாழ்வார்கள்.
- ❖ விரதத்தை நோற்காது அருகிலிருந்து அக்கதையை கேட்பவர்களுக்கும் கேடு வராது.
- ❖ அவர்கள் எல்லாப் பிறப்புகளிலும் சிறப்போடு வாழ்வார்கள்.

(vii) கந்தபுராணத்தைப் பாடியவர் யார்? இப்புராணத்தின் எக்காண்டத்தில் மீட்சிப் படலம் இடம் பெற்றுள்ளது?

பாடியவர் - கச்சியப்பசிவாச்சாரியார்

காண்டம் - யுத்த காண்டம்

(viii) ஈழத்தில் பாடல் பெற்ற புராதன ஈஸ்வரங்கள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.

திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம்

(ix) திருமுறைகளைத் தொகுத்தவர் யார்? தொகுப்பித்தவர் யார்?

தொகுத்தவர் - நம்பியாண்டார் நம்பி

தொகுப்பித்தவர் - இராஜராஜ சோழன்

(x) கண்ணகியம்மன் சடங்குகளின்போது பாடப்படும் பாடல்களுக்குப் பின்னணியாக ஒலிக்கப்பெறும் இசைக்கருவிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

சிலம்பு, உடுக்கு, பறை, குழல், அம்மானைக்காய்

**(2 x 10 = 20 புள்ளிகள்)**

2. (i) மேல்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

(அ) "மீளா அடிமை உமக்கே......"

(ஆ) "குனித்த புருவமும் கொவ்வைச்......"

(இ) "உற்றுமை சேர்வது மெய்யினையே......"

(ஈ) "உம்பர்தருத் தேனுமணிக்......"

(உ) "தூக்கும் பனுவல் துறை......"

(ii) மேலே (i) இல் எழுதிய பாடல்களின் பொழிப்புரையை எழுதுக.

(அ) திருச்சிற்றம்பலம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
முளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங்கி ருப்பீர் திருவாருரீர் வாழ்ந்து போதீரே.

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

திருவாரூரில் வீற்றிருப்பவரே! பிறர் எவரையும் நாடாது, உமக்கே நிரந்தர அடிமை பூண்டு ஆட்பட்டிருக்கும் அடியவர்கள், மூண்டு எரியாத நெருப்புப்போல (வெளிப்படக்காட்டாது) உள்ளே மனம்வருந்தி, மிகவும் முகம்வாடி தங்கள், துன்பத்தை எடுத்துரைக்கும் போது (அதற்குப் பரிகாரமாக) எதுவும் செய்யாது இருப்பவரே! நீர் நன்கு வாழ்ந்து போவீராக!

(ஆ) திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

வளைந்த புருவங்களையும் கொவ்வைப்பழம் போன்ற வாயில் புன்சிரிப்பினையும் குளிர்ச்சியான சடையினையும் பவளம்போன்ற மேனியில் பால்போன்ற வெண்ணீற்றையும் பேரின்பத்தைத் தருகின்றதும் பொன்மயமானதுமான தூக்கிய திருவடியையும் காணும் பேறு கிடைத்தால் (வேண்டாம் என ஒதுக்கத்தக்க) மனிதப்பிறவியும் வேண்டியதேயாகும்.

(இ) திருச்சிற்றம்பலம்

உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பது உன்பணியே அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே பிரம புரத்தை உகந்தனையே.

திருச்சிற்றம்பலம்

பொழிப்புரை:

இறைவா! உமாதேவியார் பிரியாது சேர்ந்து இருப்பது உனது திருமேனியையே. ஞானியர் உணர்வதும் உனது மெய்மையையே, கற்றுணர்ந்த துறவிகள் வெறுப்பது சிற்றின்பங்களையே, கனல் வீசுகின்ற உனது நெற்றிக் கண் எரித்தது மன்மதனையே, உனது மானத்தை மறைப்பது பாம்பே, தேவர்கள் செய்வது உனது தொண்டினையே, நீ பெற்று அணைத்தது முருகனையே, அத்தகைய நீ பிரமபுரத்தை விரும்பி உறைகின்றாய்.

(ஈ) திருச்சிற்றம்பலம்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்தனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப்பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

தம்பியாகிய முருகப் பெருமானுக்காக (முருகனிடம் வள்ளி வந்து அடைவதற்காக யானை வடிவிலே) காட்டை அடைந்தவரே! தந்தையை வலம் செய்தற்குப் பரிசாக அவரால் அருளப்பட்ட மாங்கனியைக் கையிலே கொண்டவரே! அன்புடைய அடியவர்களுக்குரிய நிலையான பொருளே! ஐந்து கரங்களையும் ஆனை முகத்தையும் கொண்ட பெருமாளே! தேவலோகத்துக் கற்பகத்தரு, காமதேனு, சிந்தாமணி என்பவற்றைப்போல என்னுடைய உள்ளமும் (பிறர் கேட்பதையெல்லாம் கொடுக்கின்ற) இரக்க சிந்தை உடையதாகி, ஒளி பொருந்திய பாற்கடலில் தோன்றிய இனிய அமுதத்தைப் போன்ற ஞான உணர்வு ஊறப்பெற்று, மெய்ஞ்ஞான இன்பமாகிய சாற்றினை எப்போதும் பருகி மகிழ்வதற்கு அடியேனுடைய உயிர்க்கு ஆதரவு தந்தருள்வாயாக!

(உ) திருச்சிற்றம்பலம்

தூக்கும் பனுவல் துறை தோய்ந்த கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வடநூற் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே சகலகலா வல்லியே.

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

அடியார்களுடைய நாவில், வடமொழியில் அமைந்த நூல்களாகிய கடலும், நிறைந்து விளங்கும் சிறந்த தமிழ் (நூல்களாகிய) செல்வமும் நிலைத்து நிற்கும்படியாகக் காத்தருள் செய்கின்ற கருணைக் கடலாகவும் சகல கலைகளுக்கும் அதிபதியாகவும் விளங்கும் கொடியே (சரஸ்வதி தேவியே)! நூல்களை ஆராய்ந்து பெற்ற துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவை நிறைந்த மொழியாற்றலும் (என்னிடம்) பெருகும்படியாக ஆணையிட்டு அருள்வாயாக!

**3.** "யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே" - திருவாதவூரர்

(i) திருவாதவூரருக்கு மாணிக்கவாசகர் எனப் பெயர் வரக் காரணம் யாது?

மாணிக்க வாசகர் அருளிய திருப்பாடல்கள் யாவும் பொருள் பொதிந்த மணியான வாசகங்களாக அமைந்த காரணத்தால் மாணிக்கவாசகர் எனும் பெயரைப் பெற்றார்.

(02 புள்ளிகள்)

(ii) திருவாதவூரர் செய்த அற்புதங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

- ❖ சிவபெருமானே நரியைப் பரியாக்கிக் கொண்டு வருமாறும் மண் சுமந்து அடிபடுமாறும் பக்தியால் கருணை பெற்றது.
- ❖ தம்முடைய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் சிவபெருமானே எழுதும்படி பெற்றுக் கொண்டவர்.
- ❖ எல்லோரும் காண கனகசபையில் புகுந்து சிவத்தோடு கலந்தது.
- ❖ பாண்டிய மன்னன் திருவாதவூரரை வைகையாற்றுச் சுடுமணலில் நிறுத்தி நெற்றியில் கல் ஏற்றி வருத்தியபோது வைகையாறு பெருக்கெடுத்தது.

(03 புள்ளிகள்)

(iii) திருவாதவூரர் 'திருச்சிற்றம்பலக் கோவையாரைப்' பாடிய சந்தர்ப்பத்தினைச் சுருக்கமாக விளக்குக.

சிதம்பரத்தில் மாணிக்க வாசகர் வாழ்ந்து வரும் நாட்களில் ஒருநாள் அந்தணர் ஒருவர் அவரிடம் வந்து மாணிக்கவாசகர் பல சமயங்களில் பாடிய பாடல்களை முறையாகச் சொல்லும்படி கேட்டார். மாணிக்கவாசகரும் அவரிடம் திருவாசகப் பாடல்கள் அனைத்தையும் சொல்லி அருளினார். அந்தணரும் அவற்றை எழுதி முடித்து, "பாவை பாடிய திருவாயால் ஒரு கோவை பாடுக" என்று கேட்டுக் கொண்டார். அதற்கு இணங்கிய மாணிக்கவாசகர் எழுதி முடித்தவுடன் அந்த அந்தணர் மறைந்தார். தன்னை ஆட்கொண்டவர் சிவபிரானே என்பதை மாணிக்கவாசகர் உணர்ந்தார்.

இறைவன் தம்கையால் எழுதிய இந்நூல்களை உலகறியச் செய்ய வேண்டி, நூலின் முடிவில் 'வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியது' என்று திருச்சாத்திட்டு தில்லைச் சிற்றம்பலத்தின் வாயிற்படியில் வைத்தருளினார்.

மறுநாள் அந்தணர் நூலின் பொருளை மாணிக்கவாசகரிடம் விளக்கிக் கேட்க 'அதன் பொருள் இறைவனே' எனக்கூறி கனகசபையில் புகுந்து சிவத்தோடு கலந்தார்.

**(05 புள்ளிகள்)**
**(02+03+05 = 10 புள்ளிகள்)**

4. "நாயகனார் முன்னம் உரைத்த ஆகமநூல்" - பெரிய புராணம்

(i) ஆகமம் என்பதன் பொருள் யாது?

தொன்று தொட்டு வரும் அறிவு அல்லது இறைவனை அடைவதற்கான வழியைக் கூறும் ஞானநூல்.

**(02 புள்ளிகள்)**

(ii) சைவம், வைணவம், சாக்தம் ஆகிய நெறிகளுக்குரிய ஆகமங்களின் சிறப்புப் பெயர்களைக் குறிப்பிடுக.

| | | |
|---|---|---|
| சைவம் | - | சிவாகமங்கள் |
| வைணவம் | - | பஞ்சராத்திரம் |
| சாக்தம் | - | தந்திரங்கள் |

**(03 புள்ளிகள்)**

(iii) சிவாகமங்கள் கூறும் நான்கு பாதங்களைச் சுருக்கமாக விளக்குக.

| | | |
|---|---|---|
| சரியா பாதம் | - | தொண்டுகள், சமயாசாரங்கள் பற்றி விளக்குகின்றது. |
| கிரியா பாதம் | - | மந்திர உச்சாடனம், சந்தியாவந்தனம், பூசை, செபம் முதலியவற்றையும் சமய, விசேட, நிருவாண, ஆசாரிய அபிஷேக தீட்சைகளையும் விளக்குகின்றது. |
| யோகபாதம் | - | அஷ்டாங்க யோகத்தைப் பற்றிக் கூறுகின்றது. |
| ஞானபாதம் | - | முப்பொருள் உண்மையை விபரிக்கின்றது. |

**( 05 புள்ளிகள்)**

**(02+03+05 = 10 புள்ளிகள்)**

5. "சத்தசத்தைச் சாரா தசத்தறியா தங்களிவை
உற்ற சத சத்தா முயிர்" - திருவருட்பயன்

(i) ஆன்மாக்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் இரண்டு தருக.

உயிர், பசு, ஜீவன், சதசத்து

**(02 புள்ளிகள்)**

(ii) ஆன்மாக்கள் 'சதசத்து' என அழைக்கப்படுவதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.

ஆன்மா ஒரு நிலையில் சத்தையும் மற்றொரு நிலையில் அசத்தையும் உணரும் தன்மை கொண்டதால் சதசத்து எனப்படுகின்றது.

**(03 புள்ளிகள்)**

(iii) மூவகை ஆன்மாக்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

ஆன்மாக்களைப் பீடித்த பாசங்களின் அடிப்படையில் பசுக்கள் மூன்று வகைப்படும்

- சகலர் - ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களாலும் பீடிக்கப்பட்ட ஆன்மாக்கள்.
- பிரளயாகலர் - ஆணவம், கன்மம் என்னும் இரு மலங்களால் பீடிக்கப்பட்ட ஆன்மாக்கள்.
- விஞ்ஞானகலர் - ஆணவம் என்னும் ஒரு மலத்தால் பீடிக்கப்பட்ட ஆன்மாக்கள்.

**(05 புள்ளிகள்)**

**(02+03+05 = 10 புள்ளிகள்)**

6. "அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு" - திருவள்ளுவர்

(i) இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகள் இரண்டின் பெயர்களைத் தருக.

தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி

**(02 புள்ளிகள்)**

(ii) பண்டிகைகளைக் கொண்டாடுவதனால் ஏற்படும் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

- இறையுணர்வை வளர்த்துக் கொள்ளவும் அதன் மூலம் சிந்தனை, சொல், செயல் என்பன புனிதப்படவும் பண்டிகைகள் வழிசமைக்கின்றன.
- வீட்டைக் கழுவுவதும், மெழுகுவதும், தோரணங்கள், கோலங்களால் அலங்கரிப்பதுவும், நீராடிப் புதிய ஆடை தரிப்பதுமான புறத்தூய்மை ஏற்படுகின்றன.
- புதிய பாத்திரங்களிலே உணவைச் சமைத்து உறவினர் விருந்தினருடன் கூடி உண்பது போன்ற உள்ளத் தூய்மையை ஏற்படுத்துகின்றன.

**(03 புள்ளிகள்)**

(iii) தீபாவளிப் பண்டிகையின் தத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக.

நரகாசுரனின் அழிவையும் அதனால் தேவரும் மனிதரும் அடைந்த சுதந்திர வாழ்வையும் நினைவு கூருமுகமாகவே ஆண்டுதோறும் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகின்றது. உண்மையில் மனிதனது மனதுக்குள் உள்ள தீய எண்ணங்கள் அசுரர் என்றும் நல்ல எண்ணங்கள் தேவர் என்றும் உருவகிக்கப்படுகின்றன. தம்மிடம் உள்ள தீய எண்ணங்களைப் போக்கி நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்வதே தீபாவளிக் கொண்டாட்டத்தின் அடிப்படைத் தத்துவமாகும்.

அது போல ஒவ்வொருவரும் ஞானமாகிய ஒளியை அடைவது தீபாவளியின் தத்துவமாக உள்ளது. நல்லெண்ணமாகிய எண்ணெயை நம் உடம்பில் பூசுதல் வேண்டும். சித்தமாகிய அரப்பினால் அழுக்காறு, வெகுளி ஆகியவற்றைத் தேய்த்துப் போக்குதல் வேண்டும். ஞானமாகிய தூய உடைகளை உடுத்துப் புனிதமாக இருத்தல் வேண்டும். விளக்கேற்றிப் புற இருளை நீக்கும் பொழுது எமது அக இருளும் நீங்க வேண்டும்.

**(05 புள்ளிகள்)**

**(02+03+05 = 10 புள்ளிகள்)**

7. மேல்வருவனவற்றுள் ஏவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.
   (i) சுவாமி விபுலாநந்தரின் சமயப்பணிகள்
   (ii) சைவ வித்தியாவிருத்திச் சங்கம்
   (iii) நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம்
   (iv) சைவ விழுமியங்களில் அன்புடைமை

**(i) சுவாமி விபுலாநந்தரின் சமயப்பணிகள்**

❖ ஈழத்துச் சமயப் பெரியார்களுள் ஒருவரான சுவாமி விபுலாநந்தர் 1892 இல் சாமித்தம்பி, கண்ணம்மையின் புதல்வராக மட்டக்களப்பு காரைதீவில் பிறந்தார்.

❖ இராமகிருஷ்ண மடத்தில் இணைந்து துறவு வாழ்க்கையை மேற்கொண்டு பிரபோதசைதன்யர் என்ற பிரமச்சரிய நாமத்தோடு சமயப் பணிகளைச் செய்தார்.

❖ சமயச் சஞ்சிகைகளின் ஊடாக ஆன்மீக அறிவினைப் பரப்பினார்.
(உ+ம்) இராமகிருஷ்ண விஜயம், வேதாந்த கேசரி, விவேகாநந்தன், பிரபுத்தபாரத.

❖ இராமகிருஷ்ண சங்கத்தின் சார்பாகப் பல பாடசாலைகளை நிறுவினார்.
(உ+ம்) மட்டக்களப்பு சிவாநந்த வித்தியாலயம்.

❖ சுவாமிகள் தமிழ் நாட்டில் இருந்த காலப்பகுதியில் பிற நிறுவனங்களோடு தொடர்புபடுத்தி சமயப் பணிகளை மேற்கொண்டார். (உ+ம்) சைவசித்தாந்த மகா சமாசம்

❖ திருக்கைலாயத்திற்கு யாத்திரையினை மேற்கொண்டார்.

- மாயாவதி ஆச்சிரமத்திலிருந்து சமயப் பணிகளையும் மேற்கொண்டார்.
- அடிகளார் சமயம் சார்ந்த பல நூல்களையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

**(ii) சைவ வித்தியா விருத்திச் சங்கம்**

- நாவலரின் கல்வி தொடர்பான சிந்தனையை தேசிய அளவில் நடைமுறைப்படுத்திய நிறுவனம் இதுவாகும்.
- 1923 இல் உருவான இச்சங்கத்தின் முதல் தலைவராக சேர்.பொன். இராமநாதன் தெரிவு செய்யப்பட்டார்.
- 1928 இல் உருவான இச்சங்கத்தின் சைவாசிரிய கலாசாலைக்கும் பாடசாலைகளுக்கும் முகாமையாளராக இந்து போர்ட். இராசரத்தினம் செயற்பட்டார்.
- இச்சங்கம் இலங்கையின் பல பாகங்களில் பாடசாலைகளை நிறுவி நடாத்தியது. (உ+ம்) மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்.
- சைவாசிரிய கலாசாலை ஒன்றை இச்சங்கம் திருநெல்வேலியில் நிறுவி சைவாசிரியர்களைப் பயிற்றுவித்தது.
- காவியப் பாடசாலை ஒன்றை நிறுவி ஆசிரியர்களின் இலக்கண, இலக்கிய அறிவை மேம்படுத்தியது.
- இலங்கை முழுவதும் தொழிற்பயிற்சிப் பாடசாலைகளை இச்சங்கம் நடாத்தியது. இவற்றில் பாடசாலைக் கல்வியோடு தொழிற்கல்வியும் வழங்கப்பட்டது.
- ஆதரவற்ற சிறுவர்களுக்கான இல்லங்களை இச்சங்கம் நடாத்தி வருகின்றது.
- 1961 இல் இச்சங்கத்தின் சகல கல்வி நிலையங்களையும் அரசாங்கம் பொறுப்பேற்ற போதிலும் இச்சங்கம் சைவச் சிறுவர் இல்லங்கள், தொழிற் பயிற்சி மையங்கள் போன்றவற்றை இயக்கி வருவதோடு, பழைய நூல்களை மீள் பதிப்புச் செய்தல், ஏழை மாணவருக்கு உதவுதல் போன்ற பணிகளை இன்று வரை முன்னெடுத்து வருகின்றது.

**(iii) நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்**

- யாழ்ப்பாணம் நயினா தீவிலே நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் அமையப் பெற்றுள்ளது.
- அறுபத்து நான்கு சக்தி பீடங்களுள் இதுவும் ஒன்றாகும்.
- இயக்கர், நாகர் போன்றோரால் இவ்வாலயம் அமைக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது.
- இவ்வாலயத்தின் இறைவி நாகபூசணி, நாகம்மாள், நாகேஸ்வரி என பல நாமங்களால் போற்றப்படுகின்றார்.

(22) WWW.PastPapers.WiKi (21)


Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

- ❖ நாகத்தைக் கருடனிடமிருந்து காப்பாற்றிய வணிகனால் இவ்வாலயம் அமைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.
- ❖ இவ்வணிகன் ஆலய பூசகராக நயினைப் பட்டரை நியமித்தான்.
- ❖ இவ்வாலயத்தின் தல விருட்சம் - வன்னிமரம், தீர்த்தம் - சித்தாமிர்த புட்கரணி, அன்னதான மடம் - அமுத சுரபி
- ❖ ஆனிப்பூரணையை தீர்த்த நாளாகக் கொண்டு மகோற்சவம் பதினைந்து நாட்கள் நடைபெறுகின்றது.

**(iv) சைவ விழுமியங்களில் அன்புடைமை**

- ❖ ஒருவர் தன்னோடு தொடர்புடைய உறவுகளிடம் காட்டும் விழுமியமே அன்புடைமை ஆகும்.
- ❖ தொடர்புடையவர்களிடம் மாத்திரமன்றி அல்லாதவர்களிடமும் அக்கறை காட்டுதல் வேண்டும். அப்படிக் காட்டும் அக்கறை அருள் எனப்படுகிறது. அருள் என்பது அன்பின் முதிர்ச்சியாகும்.
- ❖ மனிதரிடத்தில் மாத்திரமன்றி விலங்குகளிடத்தும் அன்பு காட்ட வேண்டும். அதனாலே தான் கொலை, களவு, புலால் உண்ணல் முதலான பாவ காரியங்களைச் சைவம் விலக்குகின்றது.
- ❖ சைவம் அன்பை கடவுளாகக் கருதுகின்றது. இதனால்தான் திருமூலர் "அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்" எனக் கூறுகிறார்.
- ❖ உயிர்களிடம் அன்பு வைப்பவன் தெய்வநிலை எய்தி விடுகிறான் என்கிறது சைவம்.
- ❖ இறைவன் அன்பே வடிவானவன். உயிர்கள் மீது இறைவன் கொண்ட பெருங்கருணை காரணமாகவே உடம்பு முதலிய கரணங்களை இறைவன் படைத்தான். இதனால் இந்த உடலைக் கொண்டு சகல உயிர்களிடத்திலும் மனிதன் கருணை காட்ட வேண்டும்.
- ❖ அன்பு என்கின்ற விழுமியப் பண்பு ஒன்று இருந்தாலே ஏனைய எல்லா விழுமியப் பண்புகளும் நம்மிடம் உண்டாகும். பகைவர்கள் அகன்று நண்பர்கள் கூடுவார்கள். துன்பம் அகன்று எங்கும் எதிலும் இன்பமே நிலவும். இதனையே பாரதியார் "அன்புடையார் இன்புற்று வாழ்தல் இயல்பு" என்கிறார்.

**(ஏதாவது இரண்டிற்கு 5 + 5 = 10 புள்ளிகள்)**

(22) WWW.PastPapers.WiKi (22)



Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!